# மிக முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

Version 1.48

HDFC BANK
We understand your world

## 1. கட்டணங்கள்

### A. கார்டு உறுப்பினர், கிரெடிட் கார்டுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள்

• வருடாந்திர கட்டணம் • புதுப்பிக்கும் (ரெனுவல்) கட்டணம்

கட்டணமானது, ஒவ்வொரு கார்டு உறுப்பினருக்கும், ஒவ்வொரு ஆஃபருக்கும் மாறுபடலாம். இது, கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போதே கார்டு உறுப்பினருக்கு தெரியப்படுத்தப்படும். பொருந்தக்கூடிய மேற்கண்ட கட்டணங்கள், கார்டு அக்கவுண்டிற்கு பில் செய்யப்படும் மற்றும் வசூலிக்கப்பட்ட மாதத்திற்கான கார்டு ஸ்டேட்மென்ட்டில் அவை குறிப்பிடப்படும்.

### B. கேஷ் அட்வான்ஸ் கட்டணங்கள்

கார்டு உறுப்பினர், அவசர சூழ்நிலையில் தங்கள் கார்டை உபயோகித்து, இந்தியா அல்லது வெளிநாடுகளிலுள்ள ATMகளிலிருந்து கேஷ் வித்டிரா செய்யலாம். வித்டிரா செய்யப்பட்ட தொகையின் மீது பரிவர்த்தனைக் கட்டணமாக 2.5% (குறைந்தபட்சம் ரூ. 300/-) வசூலிக்கப்படும், இது அடுத்த ஸ்டேட்மென்ட்டில் கார்டு உறுப்பினருக்கு பில் செய்யப்படும். எச் டி எஃப் சி பேங்க் முடிவுக்கேற்ப பரிவர்த்தனைக் கட்டணம் மாறுதலுக்கு உட்படலாம். அனைத்து கேஷ் அட்வான்ஸ்களுக்கும், வித்டிராயல் தேதி முதல், முழு பேமென்ட் திருப்பிச் செலுத்தப்படும் தேதி வரை, ரிவால்விங் கிரெடிட் (தயவு செய்து கட்டணங்களின் அட்டவணையைப் பார்க்கவும்) மீது வசூலிக்கப்படும் கட்டணங்களுக்கு ஈடான ஒரு நிதிக் கட்டணம் உண்டு. இந்த நிதிக் கட்டணம், எச்டிஎஃப்சி பேங்கின் முடிவுக்கேற்ப மாறுதலுக்கு உட்படலாம்.

### C. கட்டணங்கள்

(i) அந்தந்த காலகட்டத்தில் பொருந்தக்கூடிய வெவ்வேறு கட்டணங்கள், எச்டிஎஃப்சி பேங்க் தன் கார்டு உறுப்பினருக்கு அளிக்கும் குறிப்பிட்ட சேவைகளுக்காக அல்லது தன் கார்டு அக்கவுண்ட் தொடர்பாக கார்டு உறுப்பினர் செலுத்த தவறிய தொகைகளுக்காக, கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டும்.

(ii) அவ்வப்போது, பொருந்துமென்றால், வாடிக்கையாளருக்கு உரிய தகவல் அனுப்பி, எந்தவொரு கட்டணத்தையும் மாற்றக்கூடிய அல்லது புதிய கட்டணங்களை அறிமுகம் செய்யக்கூடிய உரிமை எச் டி எஃப் சி பேங்கிற்கு உள்ளது.

### D. வட்டியில்லாத காலம்

குறிப்பிட்ட கிரெடிட் கார்டு மீது பொருந்தும் திட்டத்திற்கு உட்பட்டு (தயவு செய்து கட்டணங்களின் அட்டவணையைப் பார்க்கவும்) மற்றும் வியாபாரியின் கிளெயிம் சமர்ப்பித்தல் அடிப்படையில், வட்டியில்லாத கிரெடிட் காலம் 20 முதல் 50 நாட்கள் வரை இருக்கலாம். எனினும், சென்ற மாத பாக்கி முழுமையாக செலுத்தப்படாவிட்டால் அல்லது கார்டு உறுப்பினர் ATM-லிருந்து கேஷ் வித்டிரா செய்திருந்தால் இது பொருந்தாது. உதாரணமாக, எச்டிஎஃப்சி பேங்க் இன்டர்நேஷனல் பிளாட்டினம் பிளஸ் கார்டுக்கு வட்டியில்லா கிரெடிட் காலம் 50 நாட்கள் வரையாகும். இதன் அர்த்தமாவது, ஒரு வாடிக்கையாளரின் பில்லிங் தேதி, மாதத்தின் 4 ஆம் தேதியாக இருந்தால், அவர் தன் கார்டு மூலம் ஏப்ரல் 5 முதல் மே 4 வரை செலவு செய்யலாம், அவரது பில் மே 4 ஆம் தேதி உருவாக்கப்படும், மற்றும் அவரது பேமென்ட் செலுத்த கடைசி நாள் மே 24 ஆம் தேதியாக இருக்கும். இதனால், ஏப்ரல் 14 அன்று செய்யப்பட்ட ஒரு செலவுக்கு 41 நாட்கள் கிரெடிட் காலம் கிடைக்கும், அதே நேரத்தில், மே 2 அன்று செய்யப்பட்ட ஒரு செலவுக்கு 23 நாட்கள் கிரெடிட் காலம் கிடைக்கும். முந்தைய பாக்கிகள் அனைத்தும் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால் மற்றும் முந்தைய மாதங்களிலிருந்து செலுத்தப்படாத பாக்கி எதுவும் இல்லையானால் மட்டுமே இந்த வட்டியில்லா கிரெடிட் காலம் கிடைக்கும்.

## 2. வரம்புகள்

கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரம்பு மற்றும் கேஷ் வித்டிராயல் வரம்பை (ஆட்-ஆன் கார்டு உறுப்பினர்களும் அதே வரம்பை பகிர்ந்து கொள்வார்கள்) தன் இஷ்டப்படி நிர்ணயிக்கும் உரிமை எச் டி எஃப் சி பேங்கிற்கு உள்ளது. இந்த வரம்புகள் பற்றிய விபரங்கள், கார்டு வழங்கும் போதும், மாதாந்திர ஸ்டேட்மென்ட்டுகளிலும் வாடிக்கையாளருக்கு தெரிவிக்கப்படும். ஸ்டேட்மென்ட் உருவாக்கப்படும் சமயத்தில் கிடைக்கக்கூடிய கிரெடிட் வரம்பு, மாதாந்திர ஸ்டேட்மென்ட்டின் ஒரு பகுதியாக தெரிவிக்கப்படும். எச்டிஎஃப்சி பேங்க், கார்டு உறுப்பினரின் அக்கவுண்ட்டை முறையான அடிப்படையில் மறுபரிசீலனை செய்யும், மற்றும் இன்டர்னல் தகுதிவரம்பின் அடிப்படையில் கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரம்பை குறைக்கக்கூடும். அது போன்ற சந்தர்ப்பத்தில், SMS / இ-மெயில், அதைத் தொடர்ந்து எழுத்துமூலமாக இந்த விபரத்தை, அதற்கான காரணங்களுடன், வங்கி வாடிக்கையாளருக்கு தெரிவிக்கும். தங்கள் கிரெடிட் வரம்பை அதிகரிக்கக் கோரும் கார்டு உறுப்பினர்கள், தங்கள் வருவாய்க்கு சான்றாக நிதி ஆவணங்களை இணைத்து, வங்கிக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளலாம். வங்கியானது, தனது சொந்த முடிவின் படி மற்றும் அளிக்கப்பட்டுள்ள இது போன்ற புதிய ஆவணங்களின் அடிப்படையில், கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரம்பை அதிகரிக்கலாம்.

## 3. நிதிக் கட்டணங்கள்

• கார்டு உறுப்பினர் தனது பாக்கியை முழுவதுமாக செலுத்த விரும்பாத பட்சத்தில், மற்றும் கார்டு உறுப்பினர் எடுத்த அனைத்து கேஷ் அட்வான்ஸுகள் மீதும், பரிவர்த்தனை தேதி முதல், அவை முழுவதுமாக திருப்பியளிக்கப்படும் வரை, அனைத்து பரிவர்த்தனைகள் மீதும், மாதாந்திர சதவீத விகிதத்தில் நிதிக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நிதிக் கட்டணங்கள், ஏதேனும் செலுத்தப்பட வேண்டுமானால், கார்டு பாக்கி முழுவதும் திருப்பிச்

செலுத்தப்படும் வரை, கார்டு உறுப்பினரின் அக்கவுண்ட்டிற்கு டெபிட் செய்யப்படும்.

- கேஷ் அட்வான்ஸ்கள் மீதான நிதிக் கட்டணங்கள், பரிவர்த்தனைத் தேதி முதல் பேமெண்ட் முழுவதுமாக திருப்பிச் செலுத்தப்படும் வரை பொருந்தும்.
- வாடிக்கையாளர் கார்டு பாக்கி ஏதேனும் கேரி ஃபார்வர்டு செய்தால் அல்லது கேஷ் அட்வான்ஸ் எடுத்தால், பாக்கி தொகை மீதும், புது பில்லிங்குகளுக்கும், சராசரி தினசரி பேலன்ஸ் முறையில் கணக்கிடப்படும் நிதிக் கட்டணம் பொருந்தும்.
- கார்டு உறுப்பினர், எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டின் ரிவால்விங் கிரெடிட் வசதியை பயன்படுத்தி மாதாந்திர பில்லிங் ஸ்டேட்மெண்ட்டில் காணப்படும் மொத்த தொகை பாக்கியை விட குறைவான ஒரு தொகையை செலுத்த விரும்பினால், பாக்கித் தொகை முழுவதற்கும் நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படும், அத்துடன் அனைத்து புதிய பரிவர்த்தனைகளுக்கும் நிதிக் கட்டணங்கள் பொருந்தும். இந்தக் கட்டணங்கள், முந்தைய பாக்கித் தொகை முழுவதுமாக செலுத்தப்படும் வரை தொடரும்.
- பேமெண்ட் செலுத்த வேண்டிய டியூ தேதியில் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச பாக்கித் தொகை செலுத்தப்படாவிட்டால் பேமெண்ட் தாமத கட்டணங்கள் வசூலிக்கப்படும். பேமெண்ட் தாமத கட்டணங்களைத் தவிர்க்க, பேமெண்ட் டியூ தேதியன்று அல்லது அதற்கு முன் எச்டிஎஃப்சி பேங்க் கார்டு அக்கவுண்ட்டில் தெளிவான நிதி செலுத்தப்பட வேண்டும். பேமெண்ட் தாமத கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு பொருந்தும்:

| ஸ்டேட்மெண்ட் பாக்கி | பேமெண்ட் தாமத கட்டணங்கள் |
|---|---|
| ரூ. 100/-க்கு குறைவாக | - இல்லை |
| ரூ. 100/- - ரூ. 500/- | - ரூ. 100/- |
| ரூ. 501/- - ரூ. 5000/- | - ரூ. 400/- |
| ரூ. 5001/- - ரூ. 10000/- | - ரூ. 500/- |
| ரூ. 10001/- - ரூ. 20000/- | - ரூ. 500/- (ஜனவரி 1, 2016 முதல் ரூ. 700/-) |
| ரூ. 20001/- மற்றும் அதற்கு மேல் | - ரூ. 700/- |

- ஓவர்லிமிட் கட்டணங்கள், கிரெடிட் வரம்பைத் தாண்டும் மொத்த பாக்கியின் மீது, ஓவர்லிமிட் தொகையின் 2.5% என்ற விகிதத்தில், குறைந்தபட்சமாக ரூ. 500/-க்கு உட்பட்டு, வசூலிக்கப்படும்.

**வெவ்வேறு கட்டணங்கள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன என்பதை கீழ்க்கண்ட எடுத்துக்காட்டு சுட்டிக்காட்டும்**

முந்தைய பாக்கி அனைத்தையும் முழுவதுமாக செலுத்திவிட்டீர்கள், உங்கள் பிளாட்டினம் பிளஸ் கார்டு அக்கவுண்ட்டில் பாக்கி எதுவுமில்லை என்று வைத்துக் கொள்வோம். உங்கள் ஸ்டேட்மெண்ட் தேதி, பிரதி மாதம் 18. உங்கள் கார்டு அக்கவுண்ட்டில் நீங்கள் மேற்கொண்ட பரிவர்த்தனைகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு இருக்கிறது.

| தேதி | பரிவர்த்தனை | தொகை |
|---|---|---|
| ஏப்ரல் 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கியது | ரூ. 15000/- |
| ஏப்ரல் 15 | ஆடைகள் மற்றும் ஆக்சஸரிகள் வாங்கியது | ரூ. 5000/- |
| ஏப்ரல் 18 | ஸ்டேட்மெண்ட் தேதி | செலுத்த வேண்டிய மொத்த தொகை = ரூ. 20000/- செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை = ரூ.1000/- |
| மே 12 | கார்டு அக்கவுண்ட்டிற்கு பேமெண்ட் அளித்தது (இங்கு பேமெண்ட் தாமத கட்டணம் பொருந்தும்) | ரூ. 2000/- (கிரெடிட்) |
| மே 14 | மளிகை சாமான் வாங்கியது | ரூ. 1000/- |
| மே 15 | கார்டு அக்கவுண்டிற்கு பேமெண்ட் அளித்தது | ரூ. 15000/- (கிரெடிட்) |

ஆணீவே, மே 18 தேதியிட்ட ஸ்டேட்மெண்ட்டில், நீங்கள் செலுத்த வேண்டிய மொத்த தொகையின் அங்கங்களாக கீழ்க்கண்டவை காணப்படும்:

கணக்கிடப்பட்ட வட்டி = (பாக்கி தொகை x மாதம் 3.49% x 12 மாதங்கள் x நாட்களின் எண்ணிக்கை) / 365

பேமெண்ட் தாமத கட்டணங்கள் = ரூ. 500/-

ஆகவே,

a) ஏப்ரல் 19 முதல் மே 11 வரை (அதாவது, 23 நாட்களுக்கு), மாதம் 3.49% என்ற விகிதத்தில், ரூ. 15000/- மீதான வட்டி = ரூ. 395.85/-

மே 12 முதல் மே 14 வரை (அதாவது, 3 நாட்களுக்கு), மாதம் 3.49% என்ற விகிதத்தில், ரூ. 13000/- மீதான வட்டி = ரூ. 44.75/-

ஏப்ரல் 19 முதல் மே 14 வரை (அதாவது, 26 நாட்களுக்கு), மாதம் 3.49% என்ற விகிதத்தில், ரூ. 5000/- மீதான வட்டி = ரூ. 149.16/-

மே 15 முதல் மே 18 வரை (அதாவது, 4 நாட்களுக்கு), மாதம் 3.49% என்ற விகிதத்தில், ரூ. 3000/- மீதான வட்டி = ரூ. 13.77/-

மே 14 முதல் மே 18 வரை (அதாவது, 5 நாட்களுக்கு), மாதம் 3.49% என்ற விகிதத்தில், ரூ. 1000/- (புதிய செலவு) மீதான வட்டி = ரூ. 5.74/-

ஆக, மொத்த வட்டி = ரூ. 609.27/-

b) பேமெண்ட் தாமத கட்டணங்கள் = ரூ. 500/-

c) வட்டி மற்றும் இதர கட்டணங்கள் மீது, சர்வீஸ் வரி @ 14%, ஸ்வச் பாரத் ஸெஸ் @0.5%, மற்றும் கிரிஷி கல்யாண் ஸெஸ் @ 0.5% = ரூ. 166.39/-

d) மொத்த அசல் தொகை பாக்கி = ரூ. 4000/-

(ரூ. 1000/- புதிய செலவு + சென்ற மாத பில்லிங் காலத்தில் செலுத்தப்படாத பாக்கி ரூ. 3000/-)

ஆக, செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை = (a) + (b) + (c) + (d) = ரூ.5275.70/-

நிதிக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள், எச் டி எஃப் சி பேங்க் நிர்ணயப்படி மாறுதலுக்கு உட்படலாம் என்பதை தயவு செய்து தெரிந்து கொள்ளவும்.

மேலும், கார்டு உறுப்பினர், அக்கவுண்ட்டுகளின் கிரெடிட் வரம்பை மீறினால், அக்கவுண்ட் மீது ஓவர்லிமிட் கட்டணங்கள் வசூலிக்கப்படும். குறிப்பிட்ட சூழ்நிலைகளில்

வசூலிக்கப்படும் கட்டணங்களின் பட்டியலுக்கு, தயவு செய்து இந்த ஆவணத்தின் முடிவில் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டணங்களின் அட்டவணையைப் பார்க்கவும்.

## 4. பில்லிங் மற்றும் ஸ்டேட்மென்ட்

A. எச் டி எஃப் சி பேங்க், சென்ற ஸ்டேட்மென்ட்டிற்குப் பிறகு கார்டு உறுப்பினரின் அக்கவுண்ட்டில் கிரெடிட் செய்யப்பட்ட பேமென்ட்டுகள் மற்றும் டெபிட் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளைக் காட்டும் மாதாந்திர ஸ்டேட்மென்ட்டை கார்டு உறுப்பினருக்கு அனுப்பும். ஒவ்வொரு மாதமும் கார்டு உறுப்பினரின் அக்கவுண்ட்டில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளின் ஸ்டேட்மென்ட்டை, முன்பே நிர்ணயிக்கப்பட்ட தேதியில், வங்கியின் பதிவுகளில் இருக்கும் தபால் முகவரிக்கு வங்கி அனுப்பும். செலுத்தப்பட வேண்டிய பாக்கி ரூ. 200/-க்கு குறைவாக இருந்தால், மற்றும் சென்ற ஸ்டேட்மென்ட்டிற்குப் பிறகு பில் செய்யப்படக்கூடிய பரிவர்த்தனை ஏதும் இல்லாவிட்டால், ஸ்டேட்மென்ட் அனுப்பப்பட மாட்டாது.

B. எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டுகள், ரிவால்விங் கிரெடிட் வசதியை கார்டு உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. ஸ்டேட்மென்ட்டில் அச்சிடப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சத் தொகையை மட்டும் கார்டு உறுப்பினர் செலுத்த தேர்வு செய்யலாம். செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை அடுத்தடுத்த ஸ்டேட்மென்ட்டுகளுக்கு கேரி ஃபார்வர்டு செய்யப்படலாம். செலுத்தப்பட வேண்டிய மொத்த பாக்கி அல்லது குறைந்தபட்ச தொகைக்கு அதிகமாக, செலுத்தப்பட வேண்டிய தொகையில் எந்தவொரு பகுதியையும் கார்டு உறுப்பினர் செலுத்த தேர்வு செய்யலாம். இது போன்ற பேமென்ட், பேமென்ட் செலுத்தப்பட வேண்டிய உரிய தேதிக்கு முன்பே செய்யப்பட வேண்டும். பேமென்ட் தாமத கட்டணங்களைத் தவிர்க்க, பேமென்ட் செலுத்த வேண்டிய தேதியன்று அல்லது அதற்கு முன், எச்டிஎஃப்சி பேங்க் கார்டு அக்கவுண்ட்டிற்கு தெளிவான நிதி கிரெடிட் செய்யப்பட வேண்டும். பேமென்ட் செலுத்தப்பட வேண்டிய தேதிக்கு போதுமான தேதிகளுக்கு முன்பே உள்ளூர் காசோலைகளை டிராப் செய்ய கார்டு உறுப்பினர்கள் அறிவுருத்தப்படுகிறார்கள். இதன் மூலம், பேமென்ட் செலுத்தப்பட வேண்டிய தேதிக்கு முன்னரே இந்த தொகை கார்டு அக்கவுண்ட்டில் வருவதை உறுதி செய்யலாம். முந்தைய ஸ்டேட்மென்ட்டுகளில் குறிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகை ஏதேனும் செலுத்தப்படாமலிருந்தால், அவை கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரம்பைத் தாண்டும் பாக்கியுடன் கூடுதலாக கார்டு உறுப்பினரின் தற்போதைய குறைந்தபட்ச தொகையில் சேர்க்கப்படும்.

C. கார்டு பாக்கிக்காக செய்யப்படும் பேமென்ட்டுகள், அடுத்துவரும் ஸ்டேட்மென்ட்டுகளில் உறுதி செய்யப்படும்.

D. கார்டு உறுப்பினரின் கார்டு பாக்கிக்காக பெறப்படும் பேமென்ட்டுகள், அனைத்து வரிகள், வருடாந்திர கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள், வட்டி கட்டணங்கள், கேஷ் அட்வான்ஸுகள் மற்றும் செலவுகள் ஆகியவற்றிற்காக, இந்த வரிசையில், அட்ஜஸ்ட் செய்யப்படும்.

E. கார்டு அக்கவுண்ட்டிற்காக செய்யப்படும் பேமென்ட்டுகள், கீழ்க்கண்ட எந்தவொரு முறையிலும் செலுத்தப்படலாம்:

(i) கார்டு உறுப்பினருக்கு எச்டிஎஃப்சி பேங்க் அக்கவுண்ட் இருந்தால், அவர் நெட்பேங்கிங், ஏ டி எம்-கள், அல்லது ஃபோன்பேங்கிங் மூலம் பேமென்ட் செலுத்தலாம்.

(ii) கார்டு உறுப்பினருக்கு எச்டிஎஃப்சி பேங்க் அக்கவுண்ட் இருந்தால், அவர் ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன் வசதியை தேர்வு செய்யலாம். இதன் மூலம், கார்டு உறுப்பினரின் எச்டிஎஃப்சி பேங்க் அக்கவுண்ட்டிலிருந்து, கார்டு உறுப்பினரின் கார்டு அக்கவுண்ட்டிற்கு, உரிய தேதியில், நிதி தானாகவே மாற்றப்பட்டுவிடும்.

(iii) வாடிக்கையாளர், மற்ற வங்கி அக்கவுண்ட்டிலிருந்து (IFSC குறியீடான HDFC0000128 பயன்படுத்தவும்) NEFT நிதி டிரான்ஸ்ஃபர் மூலமாக பேமென்ட் செய்யலாம் அல்லது VISA மணி டிரான்ஸ்ஃபர் வசதியைப் பயன்படுத்தலாம்.

(iv) கார்டு உறுப்பினருக்கு எச்டிஎஃப்சி பேங்க் அக்கவுண்ட் இல்லாவிட்டால், அவர் இதர வங்கிகளின் நெட்பேங்கிங் அக்கவுண்ட்டுகளைப் பயன்படுத்தி, பில் டெஸ்க் வசதி மூலம் பேமென்ட் செலுத்தலாம்.

(v) பேமென்ட் இன்ஸ்ட்ருமென்ட்டை (காசோலை அல்லது டிராஃப்ட்), எச் டி எஃப் சி கிளைகள் மற்றும் ATMகளில் வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டு டிராப் பாக்ஸ்களில் போடலாம். காசோலை/டிராஃப்ட், எச்டிஎஃப்சி பேங்க் கார்டு நம்பர் xxxx xxxx xxxx xxxx க்கு பேயபிள் ஆக இருக்க வேண்டும்.

(vi) வங்கிக் கிளைகளில், கேஷ் பேமென்ட் மூலம்.

F. பில்லிங் பிரச்சனைகள்: ஸ்டேட்மென்ட்டில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், கார்டு உறுப்பினர், ஸ்டேட்மென்ட் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் எழுத்து மூலமாக அதை எச்டிஎஃப்சி பேங்கிற்கு தெரிவிக்காவிட்டால், ஸ்டேட்மென்ட்டிலிருக்கும் அனைத்து பரிவர்த்தனைகளும் சரியாக உள்ளன என்று ஒப்புக் கொண்டதாக எடுத்துக் கொள்ளப்படும். இது போன்ற தகவல் கிடைக்கப்பெற்றால், எச்டிஎஃப்சி பேங்க் அந்தக் கட்டணத்தை தற்காலிக அடிப்படையில், ஆய்வு செய்யப்படுவதற்காக, ரிவர்ஸ் செய்யும். அதையடுத்து செய்யப்படும் ஆய்வுகள் முடிவுற்றதும், அது போன்ற கட்டணங்களுக்கு கார்டு உறுப்பினர் அக்கவுண்ட் பொறுப்பாகும், தொடர்புடைய ரெட்ரீவல் கோரிக்கை கட்டணங்களுடன் சேர்த்து கட்டணமும் அடுத்துவரும் ஸ்டேட்மென்ட்டில் மீண்டும் சேர்க்கப்படும். வாடிக்கையாளரிடமிருந்து (வாடிக்கையாளர்களிடமிருந்து) பிரச்சனை குறித்த தகவல் கிடைக்கப்பெற்றதும், அதிகபட்ச காலமாக அறுபது நாட்களுக்குள், எங்கெல்லாம் தேவையோ மற்றும் மெம்பர் வங்கியிலிருந்து கிடைக்கப்பெற்ற தேவையான ஆவணம்/ஆவணங்களை வங்கி அளிக்கும். இது வீஸா/மாஸ்டர் கார்டு / டைனர்ஸ் கிளப் போன்ற அந்தந்த ஃபிராஞ்சைஸீ வரையறுத்த இயக்க வழிமுறைகளுக்கு உட்பட்டது.

G. தொடர்பு விபரங்கள்: எந்தவொரு கேள்விகளுக்கும் அல்லது குறை தீர்ப்பதற்கும், கார்டு உறுப்பினர், எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டுகளை கீழ்க்கண்டவை மூலமாக தொடர்பு கொள்ளலாம்:

- 24 மணிநேர கஸ்டமர் சர்வீஸ் கால் சென்டர் - இந்த

ஆவணத்தின் முடிவிலும், மாதாந்திர ஸ்டேட்மென்ட்டின் பின்பக்கத்திலும், தொலைபேசி எண்களின் ஒரு விபரமான பட்டியல் இடம்பெற்றுள்ளது.

- தபால் மூலம் - மேனேஜர், எச் டி எஃப் சி பேங்க் கார்டுகள் பிரிவு, தபால் பெட்டி எண் 8654, திருவான்மியூர் பி. ஓ., சென்னை - 600 041.
- இ-மெயில் மூலம்: customerservices.cards@hdfcbank.com

5. டிஃபால்ட் (கார்டு அக்கவுண்ட் பாக்கியை செலுத்த தவறுவது)

கார்டு அக்கவுண்ட் பாக்கியை செலுத்த தவறும் பட்சத்தில் (டிஃபால்ட்), கார்டு அக்கவுண்ட்டில் இருக்கும் ஏதேனும் பாக்கியை செலுத்தக் கோரி கார்டு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்படும். இது தபால், ஃபேக்ஸ், தொலைபேசி, இ-மெயில், SMS மெஸேஜிங் மற்றும்/அல்லது நினைவுபடுத்துதல், பின் தொடர்வு மற்றும் பாக்கியை பெறுவது போன்றவற்றிற்கு மூன்றாம் தரப்புகளை நியமித்தல் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும். இது போன்று நியமிக்கப்படும் மூன்றாம் தரப்பு, கடன் திரும்பப் பெறுதலின் நடத்தை விதி தொகுப்பை முழுவதுமாக பின்பற்றும்.

6. மீட்புரிமை

குறிப்பிட்ட காலத்திற்குள் கார்டு அக்கவுண்ட்டிலிருக்கும் பாக்கியை திருப்பிச் செலுத்துமாறு வங்கி உத்தரவிட்டும் செலுத்தப்படாவிட்டல், வங்கியானது, எந்த நேரத்திலும், எந்தவித நோட்டீஸுமின்றி, கார்டு உறுப்பினருக்கு மற்றும் / அல்லது ஆட்-ஆன் கார்டு உறுப்பினருக்கு சொந்தமான, வங்கியின் எந்தவொரு அக்கவுண்ட் / கஸ்டடியில் இருக்கும் எல்லா பணத்தின் மீதும் வங்கிக்குப் பற்றுரிமை உள்ளது.

7. கார்டு மெம்பர்ஷிப்பை ரத்து செய்தல்

A. கார்டு உறுப்பினர், கார்டு மெம்பர்ஷிப்பை எந்த நேரத்திலும், கீழ்க்கண்ட முகவரியில் எச்டிஎஃப்சி பேங்கிற்கு எழுதி, ரத்து செய்யலாம்: “மேனேஜர், எச்டிஎஃப்சி கிரெடிட் கார்டுகள், தபால் பெட்டி எண் 8654, திருவான்மியூர் பி.ஓ., சென்னை - 600 041”. கடிதத்துடன் கார்டுகளை குறுக்கு வாக்காக வெட்டி துண்டுகளாக்கி அனுப்ப வேண்டும். எழுத்துமூல கோரிக்கையின் அடிப்படையில் அனைத்து கார்டுகளும், ஆட்-ஆன் கார்டுகள் உட்பட, ரத்து செய்யப்படும். வெட்டப்பட்ட கார்டுகள் மற்றும் கார்டு அக்கவுண்ட் பாக்கியை தீர்க்க பேமெண்ட்டுகள் அனைத்தும் பெறப்பட்ட பிறகே கார்டு ரத்து செய்யப்படும். புரோ-ராட்டா அடிப்படையில் வருடாந்திர, சேர்க்கை அல்லது புதுப்பித்தல் கட்டணங்கள் எதுவும் திருப்பியளிக்கப்படாது.

B. கார்டு உபயோகத்தில் ஏதேனும் வழக்கமற்ற மற்றும் அசாதாரண பரிவர்த்தனை முறைகள் எதையேனும் வங்கி கவனித்தால், வங்கியானது, தனது பதிவுகளில் இருக்கும் வாடிக்கையாளரின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தொலைபேசி எண்ணில் வாடிக்கையாளரைத் தொடர்பு கொள்ள முயற்சித்து, கார்டு பரிவர்த்தனையின் உண்மைத்தன்மையை சரிபார்க்கும். வாடிக்கையாளருடன் வங்கியால் தொடர்பு கொள்ள முடியாவிட்டால், கார்டு உறுப்பினரின் நன்மைக்காக மற்றும்/அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக அவசியம் என்று வங்கி நியாயமாக நம்பும் பட்சத்தில், எந்தவித நோட்டீஸுமின்றி கார்டு உபயோகத்தை வங்கி உடனடியாக கட்டுப்படுத்தும்/ரத்து செய்யும்.

கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டிய பாக்கியை செலுத்தாவிட்டால் அல்லது அளிக்கப்பட்ட கிரெடிட் வரம்பை தாண்டினால், எச்டிஎஃப்சி பேங்க், கிரெடிட் கார்டு வசதியை தற்காலிமாக சஸ்பெண்டு செய்யலாம். ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு அல்லது கார்டு அக்கவுண்ட் சஸ்பெண்டு செய்யப்பட்ட பிறகு, கிரெடிட் கார்டு பயன்படுத்தப்படக்கூடாது.

C. இது போன்ற சூழ்நிலையில், கார்டு உறுப்பினர் (ஏதேனும் டிஃபால்ட் அல்லது சட்டத்திற்கு தேவைப்படும் இதர அறிக்கை ஆகியவற்றிற்கு உட்பட்டு) அக்கவுண்ட்டில் இருக்கும் மொத்த பண பாக்கியையும் உடனடியாக எச்டிஎஃப்சி பேங்கிற்கு செலுத்திவிட வேண்டும். இது, அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் அக்கவுண்ட்டில் இன்னும் சார்ஜ் செய்யப்படாத இதர தொகைகள் உட்பட, ஒப்பந்தத்தின் கீழ் எச்டிஎஃப்சி பேங்கிற்கு உரிய அனைத்து தொகைகளும் அடங்கியது. இது போன்ற செலுத்த வேண்டிய பாக்கியை கார்டு உறுப்பினர் முழுமையாக செலுத்திய பிறகே கார்டு ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

D. கார்டு உறுப்பினரின் இறப்பு அல்லது இயலாமை, கார்டு உறுப்பினரின் நிறுவனம் நொடித்துப் போதல் / கலைக்கப்படுதல் / திவால் ஆதல் / அல்லது மூடப்படுதல் போன்ற சூழ்நிலைகளில், கார்டு உறுப்பினருக்கு அத்துடன் ஆட்-ஆன் கார்டு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட கார்டு உடனடியாக ரத்தாகிவிடும். ஏதேனும் அரசு / ஒழுங்குமுறை அதிகாரிகளின் அறுவுருத்தல்களின் அடிப்படையில் கார்டு அக்கவுண்ட் சஸ்பெண்டும் செய்யப்படலாம். கார்டு அக்கவுண்ட்டில் இருக்கும் பாக்கி அனைத்தும், இறப்பு அல்லது இயலாமை, நொடித்துப் போதல், திவால் ஆதல், மூடப்படுதல் அல்லது அரசு / ஒழுங்குமுறை அதிகாரிகளின் அறிவுருத்தல்கள் ஆகிய எந்த காரணமானாலும், செலுத்தப்பட வேண்டிய பாக்கி தொகைகள் அனைத்தையும் செலுத்த கார்டு உறுப்பினருக்கு இருக்கும் பொறுப்புக்கு எந்த பாரபட்சமும் இல்லாமல், அமலில் இருக்கும் உரிய சட்டங்களுக்கேற்ப கார்டு அக்கவுண்ட் பாக்கியை முழுமையாக வசூலிக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

8. கார்டு இழப்பு/திருட்டு/ தவறான பயன்பாடு

A. பிரைமரி அல்லது ஏதேனும் அடிஷனல் கிரெடிட் கார்டு தவறினால், தொலைந்தால், திருட்டுப் போனால், சேதமடைந்தால், கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்காவிட்டால் அல்லது கார்டு உறுப்பினரின் அனுமதியின்றி கிரெடிட் கார்டு உபயோகிக்கப்படுகிறது என்ற சந்தேகம் எழுந்தால், கார்டு உறுப்பினர், 24-மணிநேர கால் சென்டரை உடனே அழைத்து தகவல் தெரிவிக்க வேண்டும். ஒரு முறை கார்டு தொலைந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்ட பிறகு, பின்னொரு சமயத்தில் கார்டு உறுப்பினருக்கு அது திரும்பக் கிடைத்தாலும், எந்த சூழ்நிலையிலும் அது உபயோகிக்கப்படக்கூடாது. ஆட்-ஆன் கார்டு என்பது, பிரைமரி கார்டு அக்கவுண்ட்டிற்கு அளிக்கப்படும் கூடுதல் வசதி என்பதால், பிரைமரி கார்டு தொலைந்ததாக அறிவிக்கப்பட்டவுடன் ஆட்-ஆன் கார்டும் செயலற்றதாகிவிடும். அதே போல், ஆட்-ஆன் கார்டு தொலைந்ததாக தெரிவிக்கப்பட்டால், பிரைமரி கார்டு

அக்கவுண்ட் மற்றும் இதர ஆட்-ஆன் கார்டுகள் செயலற்றதாகிவிடும்.

B. கார்டு தொலைந்து போனதாக தெரிவிக்கப்படும் முன்பு கார்டு அக்கவுண்ட்டில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு வங்கி பொறுப்பாகாது, முழுப் பொறுப்பும் கார்டு உறுப்பினரைச் சார்ந்தது. கார்டு இழப்பு பற்றிய முறையான அறிவிப்பு ஒரு முறை வங்கிக்கு கிடைத்ததும் கார்டு உறுப்பினரின் பொறுப்பு முடிவடைகிறது. கார்டு இழப்பு அல்லது தொலைந்து போனது பற்றி எச்டிஎஃப்சி பேங்கிற்கு தெரிவிப்பதுடன் கூடுதலாக, கார்டு உறுப்பினர், கார்டு இழப்பு அல்லது திருட்டு பற்றி காவல் துறையில் புகார் செய்து, FIR தாக்கல் செய்து, போலீஸ் புகார் பதிவின் நகலை அளிக்க வேண்டும்.

C. கார்டு உறுப்பினர் அல்லது அடிஷனல் கார்டு உறுப்பினரின் அனுமதியுடன் PIN எண் அல்லது கார்டைப் பெற்று யாரேனும் கார்டை தவறாக பயன்படுத்தினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் கார்டு உறுப்பினரே பொறுப்பாவார்.

D. கார்டு உறுப்பினர் மோசடி செய்ததனால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் அவரே பொறுப்பாவார். கார்டு உறுப்பினர், நியாயமான கவனிப்பின்றி செயல்பட்டால், அதனால் ஏற்படும் இழப்புகள் அனைத்திற்கும் அவரே பொறுப்பாவார்.

E. எச்டிஎஃப்சி பேங்க், கார்டு உறுப்பினர் அல்லது ஏதேனும் அடிஷனல் கார்டு உறுப்பினருக்கு அறிவிக்காமலேயே, ஒரு கார்டு அல்லது PIN எண்ணின் இழப்பு, திருட்டு அல்லது தவறான பயன்பாடு பற்றிய எந்தவொரு தகவலையும், அவசியம் என்று கருதினால், காவல் துறைக்கு அல்லது உரிய அதிகாரிகளுக்கு அளிக்கும்.

F. கார்டு உறுப்பினர்கள், கிரெடிட் கார்டில் ஏதேனும் மோசடியான பரிவர்த்தனைகள் செய்யப்பட்டதன் விளைவாக ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட, தங்கள் சொந்த விருப்பப்படி, ஒரு தேர்வுக்குரிய இன்ஷூரன்ஸ் தயாரிப்பை பெறலாம். இந்த இன்ஷூரன்ஸ் காப்பீடு பற்றிய கூடுதல் விபரங்கள் மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு செய்து எங்கள் வங்கிப் பிரதிநிதியை தொடர்பு கொள்ளவும்.

## 9. ரிவார்டு புள்ளிகள் எத்தனை காலம் செல்லுபடியாகும்

ரிவார்டு புள்ளிகள், அளிக்கப்பட்ட தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். உதாரணமாக, உங்களுக்கு ரிவார்டு புள்ளிகள், மே 2015-ல் கிடைத்திருந்தால், மே 2017-ல் அது காலாவதியாகிவிடும்.

## 10. குறை நிவர்த்தி பிரிவு

சமீபத்தில் வங்கியுடன் தொடர்பு கொண்ட போது உங்களுக்கு சரியான பதில் கிடைக்காமல் அதிருப்தி ஏற்படும் அரிய சந்தர்ப்பத்தில், நீங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதலாம் - மேனேஜர், கிரீவன்ஸ் செல், எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டுகள் பிரிவு, 8, லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, திருவான்மியூர், சென்னை - 600 041, அல்லது திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை எங்களை 044-23625600 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## 11. டிஸ்குளோஷர்

நடப்பிலிருக்கும் தொழில் நடைமுறைகளின்படி, அந்தந்த சமயத்தில், கிரெடிட் கார்டு(கள்) தொடர்பான எந்தவொரு தகவலையும், எந்தவொரு கிரெடிட் அமைப்பிற்கும் (தற்போதைய அல்லது எதிர்கால), வாடிக்கையாளருக்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல், வங்கி வழங்கலாம் என்பதை கார்டு உறுப்பினர் ஒப்புக் கொள்கிறார். தி கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோ இந்தியா லிட்., (CIBIL) என்பது, நிதியமைப்பின் இயக்கம் மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்த இந்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் நிறுவப்பட்ட ஒரு முன்முயற்சியாகும். இந்த முன்முயற்சியில் அங்கமாக இருக்கும் அனைத்து வங்கிகளும், நிதி நிறுவனங்களும், வாடிக்கையாளர் தரவை CIBIL / கிரெடிட் பீரோக்களுடன் பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது. மேலும் இந்த தகவலானது, கிரெடிட் இன்ஃபர்மேஷன் கம்பெனீஸ் ரெகுலேஷன் சட்டம், 2005 என்ற சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இதற்கிணங்க, கார்டு பாக்கியை குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தாமலிருந்தால், உரிய நோட்டீஸ் அனுப்பி, வாடிக்கையாளர் கிரெடிட் கார்டு(கள்) டீஃபால்ட் செய்தது தொடர்பான எந்தவொரு தகவலையும் CIBIL மற்றும் வேறு எந்தவொரு கிரெடிட் பீரோவுக்கும் (தற்போதைய மற்றும் எதிர்கால) வங்கி வெளியிடலாம் என்பதை கார்டு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். ஓவர்டியூ கார்டு அக்கவுண்ட்டுகளுக்கான பேமென்ட் அளிக்கப்பட்டது தொடர்பான எந்தவொரு தற்போதைய / புதுப்பிக்கப்பட்ட தரவும், வங்கிக்கு பேமென்ட் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் CIBIL / இதர கிரெடிட் பீரோக்களில் இடம்பெறும். கார்டு உறுப்பினர் மற்றும் வங்கிப் பிரதிநிதிக்கிடையே நடைபெறும் குறைகள்-தொடர்பான உரையாடல் அல்லது பேமென்ட் ரிக்கவரி தொடர்பான உரையாடல்கள் அல்லது வேறு ஏதேனும் உரையாடல்களை, வங்கி அவசியம் என்று கருதுபவற்றை, தன் விருப்பப்படி பதிவு செய்யும் என்பதையும் கார்டு உறுப்பினருக்கு வங்கி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. குறிப்பிட்ட சில கிரெடிட் கார்டு வகைகள் மீது ஒரு காம்ப்ளிமென்ட்ரி இன்ஷூரன்ஸ் காப்பீடு உள்ளது. கிரெடிட் கார்டு வழங்கப்பட்ட தேதியிலிருந்து இந்த காப்பீடு தொடங்குகிறது. இது பற்றிய கூடுதல் விபரங்கள் மற்றும், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு செய்து பயன்பாடு வழிகாட்டியைப் பார்க்கவும்.

ஒன்அசிஸ்ட் வழங்கும் முதலாம் ஆண்டு காம்ப்ளிமென்ட்ரி மெம்பர்ஷிப்பும் குறிப்பிட்ட சில கிரெடிட் கார்டு வகைகளுக்கு வழங்கப்படுகிறது. உங்கள் கிரெடிட் கார்டு உங்களுக்கு டெலிவர் செய்யப்பட்ட ஒரு வாரத்திற்குள் இந்த மெம்பர்ஷிப் பதிவு நடைபெறும். கூடுதல் விபரங்களுக்கு, தயவு செய்து வெல்கம் கிட்டை பார்க்கவும்.

## 12. பிராந்திய மொழிகளில் மிக முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

பிராந்திய மொழிகளில் எம் ஐ டி சி பற்றிய தகவலுக்கு தயவு செய்து விசிட் செய்யவும்: www.hdfcbank.com

கிடைக்கப்பெறும் தேர்வுகள்

1) ஹிந்தி 2) கன்னடம் 3) மலையாளம் 4) தெலுங்கு 5) தமிழ் 6) பெங்காலி 7) மராத்தி 8) குஜராத்தி 9) பஞ்சாபி 10) ஒரியா 11) அஸாமீஸ் 12) உருது 13) சிந்தி

# கட்டணங்களின் அட்டவணை

| கட்டணங்களின் விளக்கம் | ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைனர்ஸ் கிளப் / பிசினஸ் ரீகேலியா / டாக்டர்ஸ் ரீகேலியா / டைனர்ஸ் கிளப் பிரீமியம் / ஜெட் பிரிவிலேஜ் வர்ல்டு / ஆல் மைல்ஸ் / டாக்டர்ஸ் ஸுப்பீரியா | டைனர்ஸ் கிளப் ரிவார்ட்ஸ் / டைம்ஸ் பிளாட்டினம் கார்டு / ஜெட் பிரிவிலேஜ் பிளாட்டினம் / ஸாலிட்டேர் / பிளாட்டினம் எட்ஜ் / மணி பேக் / பிசினஸ் மணி பேக் / ஜெட் பிரிவிலேஜ் டைட்டேனியம் / டைம்ஸ் டைட்டேனியம் கார்டு / டீச்சர்ஸ் பிளாட்டினம் / பிசினஸ் பிளாட்டினம் / ஸ்னாப்டீல் எச் டி எஃப் சி பேங்க் கார்டு |
|---|---|---|
| வட்டியில்லா காலம் | 50 நாட்கள் வரை | 50 நாட்கள் வரை |
| செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச தொகை | 5%, குறைந்தபட்சம் ரூ. 200/- | 5%, குறைந்தபட்சம் ரூ. 200/- |
| கேஷ் அட்வான்ஸ் வரம்பு | கிரெடிட் வரம்பின் 40% | கிரெடிட் வரம்பின் 40% |
| வருடாந்திர / ரெனுவல் கட்டணம் | ரீகேலியா / பிசினஸ் ரீகேலியா / டாக்டர்ஸ் ரீகேலியா - ரூ. 2500/- / ரூ. 2500/-<br>டைனர்ஸ் கிளப் பிரீமியம் - ரூ. 2500/-<br>ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் வர்ல்டு - ரூ. 2500/-<br>ஆல் மைல்ஸ் / டாக்டர்ஸ் ஸுப்பீரியா - ரூ. 1000/-<br>ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைனர்ஸ் கிளப் - ரூ. 1000/- / ரூ. 5000/- | டைனர்ஸ் கிளப் ரிவார்ட்ஸ் - ரூ. 1000/-<br>ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் பிளாட்டினம் / டைம்ஸ் பிளாட்டினம் கார்டு - ரூ. 1000/-<br>ஸாலிட்டேர் / பிளாட்டினம் எட்ஜ் / மணி பேக் / ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைட்டேனியம் - ரூ. 500/-<br>டைம்ஸ் டைட்டேனியம் கார்டு / டீச்சர்ஸ் பிளாட்டினம் / பிசினஸ் மணி பேக் / ஸ்னாப்டீல் எச் டி எஃப் சி பேங்க் கார்டு - ரூ. 500/-<br>பிசினஸ் பிளாட்டினம் - ரூ. 299/- |
| வருடாந்திர கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்படுவதற்கு, செலவு வரம்பு நிபந்தனை<br>கீழ்க்கண்ட பரிவர்த்தனைகள் இதில் சேராது<br>• கேஷ் ஆன் செல்<br>• பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர்<br>• கேஷ் வித்டிராயல் | **பிசினஸ் பிளாட்டினம்**<br>கார்டு செட் அப் தேதியிலிருந்து முதல் 90 நாட்களுக்குள் ரூ. 5,000/- செலவு செய்தால், முதலாண்டு மெம்பர்ஷிப் கட்டணம் திருப்பியளிக்கப்படும்.<br>ஒரு ஆண்டில் ரூ. 30,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**சாலிட்டேர் / டைட்டேனியம் எட்ஜ் / பிளாட்டினம் எட்ஜ் / மணி பேக் / பிசினஸ் மணி பேக்**<br>கார்டு செட் அப் தேதியிலிருந்து முதல் 90 நாட்களுக்குள் ரூ. 10,000/- செலவு செய்தால், முதலாண்டு மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>ஒரு ஆண்டில் ரூ. 50,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**ஆல் மைல்ஸ் / டாக்டர்ஸ் ஸுப்பீரியா / டைனர்ஸ் கிளப் ரிவார்ட்ஸ்**<br>கார்டு செட் அப் தேதியிலிருந்து முதல் 90 நாட்களுக்குள் ரூ. 15,000/- செலவு செய்தால், முதலாண்டு மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>ஒரு ஆண்டில் ரூ. 1,00,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**ரீகேலியா / பிசினஸ் ரீகேலியா / டாக்டர்ஸ் ரீகேலியா / டைனர்ஸ் கிளப் பிரீமியம்**<br>கார்டு செட் அப் தேதியிலிருந்து முதல் 90 நாட்களுக்குள் ரூ. 40,000/- செலவு செய்தால், முதலாண்டு மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>ஒரு ஆண்டில் ரூ. 3,00,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைட்டேனியம் / டைம்ஸ் டைட்டேனியம் கார்டு / ஸ்னாப்டீல் எச் டி எஃப் சி பேங்க் கார்டு**<br>ஒரு ஆண்டில் ரூ. 1,50,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் பிளாட்டினம் / டைம்ஸ் பிளாட்டினம் கார்டு**<br>ஒரு ஆண்டில் ரூ. 2,50,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் வர்ல்டு**<br>ஒரு ஆண்டில் ரூ. 3,00,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.<br>**டீச்சர்ஸ் பிளாட்டினம்**<br>கார்டு செட் அப் தேதியிலிருந்து முதல் 90 நாட்களுக்குள் ரூ. 10,000/- செலவு செய்தால், முதலாண்டு மெம்பர்ஷிப் கட்டணம் திருப்பியளிக்கப்படும்.<br>ஒரு ஆண்டில் ரூ. 30,000/- செலவு செய்தால், அடுத்தாண்டுக்கான வருடாந்திர மெம்பர்ஷிப் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும். | |
| அடிஷனல் கார்டு இலவசம் | ஆயுட்காலம் முழுவதும் இலவசம் (3 ஆட்-ஆன் கார்டுகள் வரை) | |
| ரிவால்விங் கிரெடிட்டிற்கான கட்டணங்கள் | ஜெட்பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைனர்ஸ் கிளப் / டைனர்ஸ் பிளாக் / இன்ஃபீனியா- மாதத்திற்கு 1.99%, அதாவது, வருடத்திற்கு 23.88%<br>ஜெட் வர்ல்டு- மாதத்திற்கு 1.99%, அதாவது, வருடத்திற்கு 23.88% (மாதத்திற்கு 3.49%, அதாவது, வருடத்திற்கு 41.88%, ஜனவரி'17 முதல்)<br>ரீகாலியா / பிசினஸ் ரீகாலியா / டாக்டர்ஸ் ரீகாலியா / பிசினஸ் ரீகாலியா ஃபர்ஸ்ட் - மாதத்திற்கு 2.95%, அதாவது, வருடத்திற்கு 35.4%<br>ரீகாலியா ஃபர்ஸ்ட்- மாதத்திற்கு 2.95%, அதாவது, வருடத்திற்கு 35.4% (மாதத்திற்கு 3.49%, அதாவது, வருடத்திற்கு 41.88%, ஜனவரி'17 முதல்)<br>இதரவை - கார்டு அளிக்கப்படும் போது ஆரம்ப வட்டி விகிதம் 3.40% மாதத்திற்கு அதாவது 40.8% ஆண்டுக்கு (மாதத்திற்கு 3.49%, அதாவது வருடத்திற்கு 41.88%, ஜனவரி'17 முதல்) செலவு, பே பேக் மற்றும் உபயோகிக்கும் முறையைப் பொறுத்து இவை அவ்வப்பொழுது மாறுபடலாம். டீஃபால்ட் செய்தால் அதற்கான அதிகபட்ச வட்டி விகிதம் 3.5% (மாதம்) அல்லது 42% (ஆண்டுக்கு) ஃபிக்ஸ்டு டெபாசிட்டுகளுக்கு எதிராக கார்டு அளிக்கப்பட்டால் - மாதம் 1.99% (ஆண்டுக்கு 23.88%), இவை பரிவர்த்தனை தேதி முதல் பொருந்தும். | |
| கேஷ் அட்வான்ஸ் கட்டணங்கள் | வித்டிரா செய்யப்பட்ட தொகையின் 2.5% அல்லது ரூ. 300, எது அதிகமோ அது | வித்டிரா செய்யப்பட்ட தொகையின் 2.5% அல்லது ரூ. 300/-, எது அதிகமோ அது |
| பேமென்ட் தாமத கட்டணங்கள்<br>(அடிப்படை கிரெடிட் கார்டு பில் தொகை) | <u>ஸ்டேட்மென்ட் பேலன்ஸ்</u><br>ரூ. 100/- க்கு குறைவாக<br>ரூ. 100/- - ரூ. 500/-<br>ரூ. 501/- - ரூ. 5,000/-<br>ரூ. 5001/- - ரூ. 10,000/-<br>ரூ. 10,001/- - ரூ. 20,000/-<br>ரூ. 20,001/- மற்றும் அதற்கு மேல் | <u>பேமென்ட் தாமத கட்டணங்கள்</u><br>இல்லை<br>ரூ. 100/-<br>ரூ. 400/-<br>ரூ. 500/-<br>ரூ. 500/- (ஜனவரி 1, 2016 முதல் ரூ. 700/-)<br>ரூ. 700/- |
| ஓவர்லிமிட் அக்கவுண்ட் மீதான கட்டணங்கள் | ஓவர்லிமிட் தொகையின் 2.5%, குறைந்தபட்சம் ரூ. 500/-க்கு உட்பட்டது | ஓவர்லிமிட் தொகையின் 2.5%, குறைந்தபட்சம் ரூ. 500/-க்கு உட்பட்டது |
| பேமென்ட் ரிட்டர்ன் கட்டணங்கள் | பேமென்ட் தொகையின் 2%, குறைந்தபட்சம் ரூ. 450/-க்கு உட்பட்டது | பேமென்ட் தொகையின் 2%, குறைந்தபட்சம் ரூ. 450/-க்கு உட்பட்டது |
| கேஷ் பிராசஸிங் கட்டணம் | ரூ. 100/- (எச் டி எஃப் சி பேங்க் கிளைகளில் அல்லது ATM-களில் டெபாசிட் செய்வதன் மூலம் பேமென்ட் செய்யப்பட்ட அனைத்து கார்டுகளுக்கும்) | ரூ. 100/- (எச் டி எஃப் சி பேங்க் கிளைகளில் அல்லது ATM-களில் டெபாசிட் செய்வதன் மூலம் பேமென்ட் செய்யப்பட்ட அனைத்து கார்டுகளுக்கும்) |
| ரிவார்டுகள் ரிடம்ஷன் கட்டணம் | ஒவ்வொரு ரிடம்ஷன் கோரிக்கைக்கும் ரூ. 75/- - ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் வர்ல்டு / ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைனர்ஸ் கிளப் ஆகிய கார்டுகள் தவிர மற்ற அனைத்து கார்டுகளுக்கும் பொருந்தும் | ஒவ்வொரு ரிடம்ஷன் கோரிக்கைக்கும் ரூ. 75/- - ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் பிளாட்டினம் மற்றும் ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைட்டேனியம் ஆகிய கார்டுகளுக்குப் பொருந்தாது |
| பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் பிராசஸிங் கட்டணங்கள் | பி டி தொகையின் 2% அல்லது ரூ. 250/-, எது அதிகமோ அது | பி டி தொகையின் 2% அல்லது ரூ. 250/-, எது அதிகமோ அது |
| பெட்ரோல் பரிவர்த்தனை ஸர்சார்ஜ்<br>(குறைந்தபட்சம் ரூ. 10/- க்கு உட்பட்டது) | ஜெட் பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைனர்ஸ் கிளப் / இன்ஃபினியா - ஒவ்வொரு பில்லிங் சுழற்சியிலும் ஃபியூயல் ஸர்சார்ஜ் தள்ளுபடி வரம்பு ரூ. 1000/- (எஸ் டி பொருந்தும்). டைனர்ஸ் பிரீமியம், ஜெட் வர்ல்டு, ரீகேலியா, டைனர்ஸ் ரிவார்ட்ஸ், ஜெட் பிளாட்டினம், ஆல்மைல்ஸ், பிசினஸ் ரீகேலியா, டாக்டர்ஸ் ரீகேலியா, பிசினஸ் மணி பேக், பிசினஸ் பிளாட்டினம், டைம்ஸ் பிளாட்டினம் - ஒவ்வொரு பில்லிங் சுழற்சியிலும் ஃபியூயல் ஸர்சார்ஜ் தள்ளுபடி வரம்பு ரூ. 500/- (எஸ் டி பொருந்தும்). மற்ற அனைத்து கார்டுகள் - ஒவ்வொரு பில்லிங் சுழற்சியிலும் ஃபியூயல் ஸர்சார்ஜ் தள்ளுபடி வரம்பு ரூ. 250/- (எஸ் டி பொருந்தும்). (பி எஸ் யு மீது ஸ்டேட்மென்ட் மட்ட தள்ளுபடி வரம்பு ஆகஸ்ட் 15, 2014 முதல் அமலில் உள்ளது). ஏப்ரல் 15, 2016 முதல், எரிபொருள் பரிவர்த்தனைகள் மீது ரிவார்டு புள்ளிகள் / ஜே பி மைல்ஸ் சேர்க்கப்படாது. ஃபியூயல் ஸர்சார்ஜ் மீது வசூலிக்கப்படும் சர்வீஸ் வரி, திருப்பியளிக்கப்பட மாட்டாது. | இவற்றிற்கிடையேயான பரிவர்த்தனைக்கு தள்ளுபடி செய்யப்படும்<br>a) ரீகேலியா / பிசினஸ் ரீகேலியா / டாக்டர்ஸ் ரீகேலியா ஆகியவைக்கு ரூ. 400/- - ரூ. 100000/-.<br>b) மற்ற அனைத்து கார்டுகளுக்கும் ரூ. 400/- - ரூ. 5000/-. ஏப்ரல் 15, 2016 முதல், எரிபொருள் பரிவர்த்தனைகள் மீது ரிவார்டு புள்ளிகள்/ஜேபி மைல்ஸ் சேர்க்கப்படாது. ஃபியூயல் ஸர்சார்ஜ் மீது வசூலிக்கப்படும் சர்வீஸ் வரி, திருப்பியளிக்கப்பட மாட்டாது. |
| இரயில் டிக்கெட் வாங்குவதற்கான கட்டணம் | ரூ. 30 /-+ பரிவர்த்தனைத் தொகையின் 2.5%. எச் டி எஃப் சி பேமென்ட் கேட்வேயில்: 1.8% + சர்வீஸ் வரி.<br>மற்ற வங்கிகளின் பேமென்ட் கேட்வேயில்: விகிதம், IRCTC இணையதளத்திற்கேற்ப | |
| தொலைந்த, திருட்டுப் போன அல்லது சேதமடைந்த கார்டுக்கு பதிலாக புதிய கார்டு அளித்தல் | ரூ. 100/- | ரூ. 100/- |
| வெளியூர் காசோலை பிராசஸிங் கட்டணம் | காசோலை மதிப்பு ரூ. 5000/- வரை - கட்டணம் ரூ. 25/-<br>காசோலை மதிப்பு ரூ. 5000/-க்கு மேல் - கட்டணம் ரூ. 50/- | காசோலை மதிப்பு ரூ. 5000/- வரை - கட்டணம் ரூ. 25/-<br>காசோலை மதிப்பு ரூ. 5000/-க்கு மேல் - கட்டணம் ரூ. 50/- |
| வெளிநாட்டு கரன்ஸி பரிவர்த்தனைகள் | கிராஸ் கரன்ஸி மார்க்-அப் ஆக வங்கி 3.5% வசூலிக்கிறது (ரீகேலியா/பிசினஸ் ரீகேலியா/டாக்டர்ஸ் ரீகேலியா / ஜெட்வர்ல்டு/ஜெட்பிரிவிலேஜ் எச் டி எஃப் சி பேங்க் டைனர்ஸ் கிளப்/டைனர்ஸ் கிளப் பிரீமியம் ஆகியவற்றிற்கு 2%) | கிராஸ் கரன்ஸி மார்க்-அப் ஆக வங்கி 3.5% வசூலிக்கிறது (டைனர்ஸ் கிளப் ரிவார்ட்ஸ்-க்கு 3.0%) |
| சர்வீஸ் வரி, ஸ்வச் பாரத் செஸ் மற்றும் கிரிஷி கல்யாண் செஸ் | அனைத்து கட்டணங்கள், வட்டி மற்றும் இதர கட்டணங்கள் மீது பொருந்தும் | அனைத்து கட்டணங்கள், வட்டி மற்றும் இதர கட்டணங்கள் மீது பொருந்தும் |

24-மணிநேர கஸ்டமர் கால் சென்டர்கள்

அகமதாபாத் / பெங்களூரு / சென்னை / தில்லி மற்றும் என் சி ஆர் / ஹைதராபாத் / கோல்கத்தா / மும்பை / புனே - 6160 6161

சண்டிகர் / கொச்சி / இந்தோர் / ஜெய்ப்பூர் / லக்னோ - 6160 616

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | : 99494 93333 | மத்தியபிரதேசம்/ சத்திஸ்கர் | : 98936 03333 | ராஜஸ்தான் | : 98750 03333 | பிஹார் / ஜார்கண்ட் / பட்னா | : 1860 266 6161 |
| அஸ்ஸாம் | : 99571 93333 | மகாராஷ்டிரா (மும்பை தவிர்த்து) மற்றும் கோவா | : 98906 03333 | தமிழ்நாடு/பாண்டிச்சேரி | : 98406 73333 | ஜம்மு மற்றும் கஷ்மீர் / ஹிமாச்சலப்பிரதேசம் (பி எஸ் என் எல் லேண்ட்லைனிலிருந்து டோல்-ஃப்ரீ) | : 1800 103 9733 |
| குஜராத் | : 98982 71111 | ஒரிஸா | : 99379 03333 | உத்திரப் பிரதேசம்/ உத்தராகண்ட் | : 99359 03333 | மேகாலயா / திரிபுரா / நாகாலாந்து / மிஸோரம் / அருணாச்சல பிரதேசம் / மணிப்பூர் (பி எஸ் என் எல் லேண்ட்லைனிலிருந்து டோல்-ஃப்ரீ) | : 1800 345 3333 |
| ஹரியானா | : 99962 43333 | பஞ்சாப் | : 98153 31111 | மேற்கு வங்காளம்/சிக்கிம்/ அந்தமான் மற்றும் நிக்கோபார் | : 98310 73333 | | |
| கர்நாடகா | : 99458 63333 | | | | | | |
| கேரளா | : 98956 63333 | | | | | | |

**கீழ்க்கண்ட இடங்களுக்கான டோல் ஃப்ரீ எண்: 1800 425 4332**

ஆக்ரா / அஜ்மீர் / அலஹாபாத் / பரேலி / புவனேஷ்வர்/ பொக்காரோ / கட்டக் / தன்பாத் / டேராடூன் / ஈரோடு / குவஹாத்தி / ஹிஸார் / ஜம்மு மற்றும் ஸ்ரீநகர் / ஜம்ஷெட்பூர் / ஜான்ஸி / ஜோத்பூர் / கர்னால் / கான்பூர் / மதுரை / மங்களூர் / மதுரா / மீரட் / மொராதாபாத் / முஸஃபர்பூர் / மைசூர் / பாலி / பட்டியாலா / ராஜ்கோட் / ராஞ்சி / ரூர்கேலா / சேலம் / சிம்லா / சிலிகுரி / சில்வாஸா / சூரத் / திருச்சி / உதய்பூர் / வாரணாசி

எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து உங்களுக்கு அழைப்புகள் வர வேண்டாம் என்றால், தயவு செய்து www.hdfcbank.com என்ற எங்கள் இணையதளத்தில் லாக் ஆன் செய்து, எங்களின் Don't call Registration option-ல் பதிவு செய்து கொள்ளுங்கள். சமீபத்திய ஸ்டேட்மென்ட்டில் பேமென்ட் தாமத கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட கார்டு அக்கவுண்டிற்கு, கேஷ் பிராசஸிங் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும்.



HDFC BANK
We understand your world